**தலைப்பு 279 - கேகாலை மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கேகாலை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 18 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமை கணக்காய்வு அறிக்கை 2022 மே 17 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கேகாலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1) (இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஓர் பகுதியாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் செயற்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணலின் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதியல்லாத சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் கூற்றில் மீதிகள் மற்றும் திறைசேரி SA 82 ஆம் படிவத்தின் ஆரம்ப மீதி ரூபா 3,067,517 இனாலும் கொள்வனவின் கீழ் ரூபா 3,550,242 இனாலும், பராதீனத்தின் கீழ் ரூபா 482,727 இனாலும் வித்தியாசம் அவதானிக்கப்பட்டன. | 2022.02.28 மற்றும் 2021.02.21 திகதியின் SA 82 படிவம் இரண்டு உள்ளதுடன் 2021. 02.11 திகதிய SA 82 படிவம் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு பயன்படத்தப்பட்டுள்ளது. | திறைசேரி குறிப்பு மற்றும் நிதி கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமானங்களை இணக்கஞ் செய்து சரியான பெறுமதியை காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஒன்றிணைந்த பரீட்சை மீதி பிரகாரம் மூலதன சொத்துக்கள் சுவீகரிப்பதற்கான செலவின விடயத்தின் கூட்டுத் தொகை ரூபா 73,336,169 ஆன போதும், திறைசேரி SA 82 படிவத்தின் ரூபா 97,002,938 ஆனதால் ரூபா 100,553,180 ஆன வித்தியாசம் அவதானிக்ககப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணம் மற்றும் தெளிவுபடுத்தல்கள் நிதிக்கூற்றக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன . | -மேற்படி- |

### 1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய ரூபா 925,954,938 ஆன மூலதன செலவினம், செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டியிருந்தது. | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் சரி செய்கிறேன். | உரிய வகைப்படுத்தலின் மீது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிவாரண உதவி மற்றும் மாற்றங்களின் கிழ் காட்ட வேண்டிய ஆதன கடன் வட்டி செலவினமான ரூபா 7,179,866 சம்பளம் மற்றும் செயற்பாடு செலவினத்தின் கீழ் காட்டப்பட்டியிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6.3 கட்டுநிதி கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள புத்தகங்கள் பிரகாரம் கட்டநிதி பெறுவனவு மற்றும் கொடுப்பனவு ரூபா 5,384,340,247 ஆன போதும் திறைசேரி புத்தகங்கள் பிரகாரம் ரூபா 5,449,700,247 ஆனதால் ரூபா 65,360,000 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | திறைசேரி புத்தகங்களில் ஏற்பட்டுள்ள தவறொன்றாகும். | திறைசேரி குறிப்புடன் இணைக்கஞ் செய்து சரியான பெறுமானத்தை காட்ட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 279 தலைப்பிற்கு மற்றும் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களிற்காக முறையே ரூபா 3,459 மில்லியன் மற்றும் ரூபா 6,219 மில்லியன் ஆக ரூபா 9,678 மில்லியன் கட்டுநிதி கோரப்பட்ட போதும் ரூபா 4,878 மில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. | தேவையான அளவிற்கு கட்டுநிதி வழங்க நிறைசேரிக்கு முடியாமலிருந்தது. | திறைசேரியுடன் கிட்டிய தொடர்புகளுடன் கட்டுநிதி முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சு மற்றும் திணைக்கள ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த கருத்திட்டங்களுக்காக ரூபா 257,846,790 பொறுப்புகளுக்கு மீளாய்வாண்டினுள் கடப்பட்டிருந்தது. | ஏற்பாடு கிடைக்கும் அளவின் பிரகாரம் கையிளுள்ள பட்டியகளை திர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். | வழங்கியுள்ள ஏற்பாடு மற்றும் கட்டுநிதி எல்லையினுள் வேலை விடயங்களை இனங்கண்டு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2 வருடங்களை விஞசிய ஒப்பந்த நிறுத்தல் வைப்பு மீதி ரூபா 5,166,140 ஆனதுடன், அவறிறில் ரூபா 3,815,209 தொகை 5 ஆண்டகளை விஞசிய மீதியானது. | 2022 ஏப்ரல் 30 திகதியன்று ரூபா 1,046,617 யினை தீர்த்துள்ளதுடன் மீதியை தாமதமின்றி திர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தற்காலிகமாக நிறுத்தி வைக்கும் வைப்பு மீதியினுள் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 365,018 ஆன வைப்பு மீதியொன்று காணப்பட்டது. உரிய லேலையை மேற்கொள்ளாமை அல்லது வேலை மேற்கொன்டதன் பின்னர் மீதியை குறித்த தரப்பினர்களுக்கு அனுப்பாததன் மீது 1 இற்கும் 2 வருடங்களிற்கும் இடையில் ரூபா 3,877,253 ஆன வைப்பு மீதியொன்று ஆனதுடன், அவற்றில் ரூபா 2,029,574 தொகை மாவட்ட செயலகத்திற்கு மற்றும் ரூபா 1,534,511 தொகை தெரனியகல பிரதேச செயலகத்திற்கு உரியதானது. | 2022 ஏப்ரல் 30 திகதியன்று ரூபா 1,951,333 யினை தீர்த்துள்ளதுடன் மீதியை தாமதமின்றி தீர்க்க நடவடிக்கை எடுக்கிறென். | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பட்டு வைப்புக்களை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) காணி சுவீகரிக்கும் செயற்முறையின் போது தொடர்புடைய நிறுவனங்களுடன் செயற்படும் போது ஏற்படும் தாமதங்கள் காரணத்தால் இழப்பீடு செலுத்தல் ரூபா 156,400,553 ஆன வைப்பு மீதியினுள் வருடங்கள் 1 இற்கும் 2 இற்குமிடையில் ரூபா 65,416,687, வருடங்கள் 2 இற்கும் 5 இற்குமிடையில் ரூபா 19,800,498 மற்றும் 5 வருடங்களை விஞ்சிய ரூபா 31,907,431 நிலவியது. | காணி சுவீகரிக்கும் செயற்முறைக்காக தொடர்புடைய நிறுவனங்களுடன் செயற்பட வேண்டி ஏற்படுவதால் அதற்காக காலமொன்று எடுப்பதாக அறிவிக்றேன். | உரிய நிறுவனங்களுடன் பின்னூட்டல் செயற்பாடு மேற்கொண்டு காணி சுவீகரிக்கும் நடவடிக்கைகளை செய்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டிற்குரிதாக 23 பிரிவுகள் மற்றும் சேவைகள் உள்ளடங்கும் வகையில் செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரிதிருந்த போதும், அச்செயல் நடவடிக்கை திட்டத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளின் முன்னேற்றத்தை இனங்காண முடியுமான வகையில் குறித்த திட்டத்திற்கு இணங்கும் வகையில் முன்னேற்ற அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டு முதல் உரிய தகவல்களை உள்ளடக்கி செயல் நடவடிக்கை திட்டமொன்ளை தயாரிக்கிறேன். | வருடாந்த திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கையை ஒத்ததாக தயாரிக்க வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் கீழ் 2019 ஆண்டில் அறநாயக பிரதேச செயலக ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் ரூபா 3,211,954 செலவில் நிர்மாணத்திருந்த கட்டிடம், 2018 ஆண்டில் ரூபா 1,005,930 செலவில் கொள்வனவு செய்திருந்த இயந்திர உபகரணங்களுடன், எப்பலாவவத்த பட்டறை கட்டிடத்தை 2020 மார்ச் 02 திகதி எப்பலாவவத்த எக்கமுது கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கு பட்டறையொன்றை நடாத்திச் செல்ல ஒப்படைக்கப்பட்டிருந்தது. பிரதான இயந்திரத்தினால் இரும்பு | போதிய கொள்ளளவுடன் பட்டறைகளை நடாத்திச் செல்ல மற்றும் குறித்த அறிக்கைகளை உரிய முறையில் பேணிச் செல்ல கிராம சக்தி மக்கள் சங்கத்திற்கு மற்றும் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தொடர்ச்சியான கிட்டிய மேற்பார்வை ஒன்றை செய்து நோக்கத்துடனான செயற்பாடுகளிற்காக செயற்திறனாக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மெல்லிசாக்களும், ஏனைய இயந்திரத்தினால் வெளியீட்டிற்குரிய ஏனைய செயற்பாடுகளும் இடம்பெறும் இக் கைத்தொழிற்சாலையில் தற்போதளவில் கிராமத்தின் கொல்லர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளமை, மெல்லிசாக்கப்பட்ட இருப்புகளிற்கான கேள்வி குறைவடைந்த காரணத்தால் இயந்திர கொள்ளலவிற்கு ஒப்பாக வெளியீடொன்றை பெற்றுக் கொள்ளாத நிலைமை காணப்பட்டது. திரட்டிய வருமானமும் செலவுகளும் மற்றும் பட்டறைகளினால் மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான பதிவேடுகள் பேணப்படாததால் ஈட்டிய வருமானத்தையும் செலவுகளையும் மற்றும் செலவுகள் தொடர்பாக மற்றும் பட்டறைகளினால் மேற்கொண்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறே பட்டறைகளை நடாத்திச் செல்வது தொடர்பாக வழிகாட்டலொன்று அல்லது ஆலோசனை வழங்கல் மற்றும் போதிய மேற்பார்வையொன்று இடம்பெறுவதாக உறுதியாகவில்லை.

## 3.3 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

மாவட்ட செயலகம் தொடர்பாக முன்னைய ஆண்டுகளில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த பின்தொடர் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத பந்திகள் பின் வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராம சக்தி மக்கள் செயற்பாட்டின் கீழ் மக்கள் சங்கங்களை இஸ்தாபிக்க 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் கிடைத்த ஏற்பாட்டின் மீது முதலாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேச செயலக பிரிவுகளினுள் 43 மக்கள் சங்கங்களிற்கு ரூபா 69,575,200 உம் 2019 ஆண்டில் இரண்டாம் கட்டத்தின் கீழ் 11 பிரதேச செயலக பிரிவுகளினுள் 96 மக்கள் சங்கங்களிற்கு ரூபா 4,560,000 உம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆண்டு இறுதியில் முதலாம் கட்டத்தில் வழங்கிய நிதியிலிருந்து 71 சதவீதமாக 34 சங்கங்கள் ரூபா 49,812,357 உம், இரண்டாம் கட்டத்தில் வழங்கிய நிதியிலிருந்து 96 சதவீதமாக 96 சங்கங்கள் ரூபா 4,358,021 உம் குறித்த செயற்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாது | எஞ்சியுள்ள நிதியை உச்ச பயன்மிக்கதாக சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த கருத்திட்டத்தை தொடர்சியாக இயங்க மற்றும் நிதியத்தை நோக்கத்திலான செயற்பாடுகளிற்கு பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வங்கிக் கணக்குகளில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | கேகாலை, வரகாபொல பிரதேச செயலங்களில் மற்றும் கேகாலை மாவட்ட செயலயத்தில் 2009 முதல் 2013 காலப்பகுதியினுள் ஏற்பட்டிருந்த ஓய்வூதிய மோசடியால் மேலும் ரூபா 16,765,760 ஆன தொகையொன்று அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் ரூபா 48,942,000 ஆன மதிப்பீடொன்றின் மீது 2014 ஒக்டோபர் மாதம் வேலைகளை ஆரம்பிக்கப்பட்டிருந்த வரகாபொல பேரூந்து தரிப்பிடம் மற்றும் கடைத்தொகுதி நிர்மாண கருத்திட்டம் நிர்மாண இடத்தின் உரிமை தொடர்பான பிரச்சினையின் மீது 2015 ஆகஸ்ட் 31 திகதி கிடைத்த நீதிமன்ற தடையுத்தரவு காரணமாக ரூபா 15,189,389 நிரைவேற்றிய வேலை பெறுமதியுடன் கருத்திட்ட நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது. | நீதிமன்ற நடவடிக்கைகள் இன்னும் முடிவடையவில்லை. | செலவாகும் தொகைக்கு நலன்கள் கிடைக்கும் வகையில் கருத்திட்டத்தை திட்டமிட வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கேகாலை மாவட்டத்தில் 2016 முதல் 2019 ஆண்டுகளில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாய நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களை மீள்குடியேர்த்தும் கருத்திட்டத்தின் கீழ் ஒரு குடும்ப அலகிற்காக தனியார் காணியொன்றில் மீள்குடியேறும் போது ரூபா 1,600,000 உம் அரச காணியொன்றில் குடியேறும் போது ரூபா 1,200,000 உம் வீதம் இழப்பீட்டுத் தொகையை செலுத்த அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனினும் வீட்டு உரிமையாளர்களால் வீடுகளை நியமங்களுக்கமைய நிர்மாணக்காமை, வேலைகளை பூர்த்தி செய்யாமை போன்ற காரணங்களால் 06 பிரதேச செயலகங்களிற்குரிய 190 இழப்பீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகை ரூபா 76,278,000 ஆனது. | இதுவரை வழங்கிய பணத்திற்காக வீட்டு நிர்மாண நடவடிக்கைகளை போதியளவு பூர்த்தி செய்யாத வீட்டு உரிமையாளர்களுக்கு உதவிக் கொடுப்பனவை இடைநிறுத்தியுள்ளதாக. | தொடர்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வீட்டு உரிமையாளர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க ஊக்கப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கேகாலை மாவட்ட செயலாளரின் SDK/EST/ADM/SOSER/D15/01/11 இலக்க மற்றும் 2018 ஜுன் 14 திகதிய கடிதம் பிரகாரம் கேகாலை மாவட்ட செயலகம், ஊனமுற்றவர்களின் சுவசக்தி அமைப்பு மற்றும் தேசிய வீட்மைப்பு அபிவிருத்தி அதிகாரசபையும் ஒன்றிணைந்த வேலைத் திட்டமொன்றாக குறைவருமான ஊனமுற்ற 300 நபர்களுக்கு வீடமைக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும், இதன் கீழ் புதிய வீடொன்றிற்காக ரூபா 5 இலட்ச உச்ச தொகை வீதம், அரை வீடுகளிற்காக ரூபா 2 இலட்ச உச்ச தொகை வீதமும், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் உதவி வழங்கவும் திட்டமிடப்பட்டிருந்தன. 381 வீட்டு பயன்பாட்டாளர்களுக்கு 2020 ஜுன் 21 திகதி வரை ரூபா 23,710,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், மேலும் செலுத்த வேண்டியுள்ள உதவித் தொகை ரூபா 95,690,000 ஆனது. 2018 பெப்ரவரி மாதத்தில் கொடி விற்பனை செய்யும் வேலைத் திட்டமொன்றை மேற்கொண்டு அதன் மூலம் ரூபா 7,362,647 இனை ஒன்றுதிரட்டி அதனை ஊனமுற்ற நபர்களின் மாவட்ட சுயசக்தி அதிகார சபையின் (சுயசக்தி நிதியத்திற்கு) செலவு வைக்கப்பட்டிருந்த போதும் அந் நிதியையும் 2022 ஏப்ரல் 30 திகதி வரை குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தி இருக்கவில்லை. வீட்டு உதவி வழங்கும் முன்னேற்றம் பலவீனமான நிலையில் காணப்பட்டதன் காரணமாக பயன்பாட்டாளர்களால் வீடுகளை நிர்மாணித்தலும் பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் 381 வீடுகளிற்கிடையில் 03 வீடுகளின் மாத்திரமே வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | இவ்வேலைத் திட்டத்தை இயக்குவதற்கான எவ்வித பொறுப்பும் மாவட்ட செயலகத்திற்கு அல்லது பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படாததுடன் வசதிகளை வழங்கல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மாத்திரம் மேற்கொள்கின்றன. | குறித்த நலன்புரி வேலைத்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனத்ததுடன் நெருங்கிய தொடர்புகளை பேணிக் கொண்டு தாமதமின்றி குறித்த செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | விதாதா, தொழிநுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் கிராமத்திற்கு தொழிநுட்பத்தை கொண்டு செல்லும் நோக்கில் ஆரம்பித்திருந்த விதாதா வேலைத் திட்டத்தின் கீழ் கேகாலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவுகளிற்காக 2005 ஆண்டில் உளர் இயந்திரம், வெதுப்பக அடுப்பு, யோகட் இன்கியுபேட்டர், தேங்காய் எண்ணெய் வடிஇயந்திரம் போன்ற 09 வகை பண்டங்களின் கீழ் 68 பண்டங்கள் வழங்கப்பட்டிருந்தன. இக் காலத்திற்குரிய (2005 முதல் 2020) விதாதா வேலைத் திட்டத்தை செயற்படுத்த கேகாலை | இவ் உபகரணங்கள் நவீன தொழிநுட்பத்திற்கு பொருந்தாதால் பெரும்பாலான உபகரணங்களை பராதீனம் செய்துள்ளதாக மற்றும் 2021 ஆண்டிற்குரிய பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். | குறித்த கருத்திட்ட நோக்கத்திலான செயற்பாடுகளிற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மாவட்ட செயலகத்தினால் போதிய கூட்டிணைப்புபொன்றை மேற்கொண்டதாக இனங்காண முடியவில்லை. பிரதேச செயலக மட்டத்தில் காணப்படும் விதாதா மத்திய நிலையங்களிலிருந்து பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டளவில் அதன் பண்டங்களின் 11 பண்ட அலகுகளை ஏலவிற்பனை மூலமும், 5 பண்ட அலகுகளைை வேறு தரப்பினருக்கு வழங்கியும், 4 பண்ட அலகுகள் அழிவடைந்தும், எஞ்சிய 48 பண்ட அலகுகளும் பயன்படுத்தாது அல்லது விளைவற்று காணப்பட்டதுடன், தற்போது கருத்திட்டம் செயற்படு மட்டத்தில் இருக்கவில்லை.

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| மாவட்டத்திற்கு மற்றும் பிரதேச செயலகங்களுக்கு உரிய வகையில் நிலைபேறான நோக்கங்களை மற்றும் இலக்குகளை திட்டவட்டமாக இனங்கண்டு அதன் பிரகாரம் அந் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிவர்த்தி செய்து கொள்ளவது தொடர்பாக தகவல் தொகுதியொன்று இல்லாததுடன் மாவட்டத்தினுள் மேற்கொள்ளப்படும் அபிவிருந்தி கருத்திட்டங்கள் அந்த அந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரியதாக அந்த அந்த வருடங்களிற்குரிய நிலைமைகளை மாத்திரம் இனங்கண்டிருந்ததால் காலரீதியாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் முன்னேற்றத்தை இனங்காண முடியவில்லை. | அரச முன்னுரிமை அபிவிருத்தி வேலைத் திட்டமான கிராம எழுச்சி, சிறந்த கிராமமொன்று போன்ற வேலைத்திட்டங்கள் மற்றும் பல அமைச்சுக்கள் திணைக்களங்கள் மூலம் வழங்கப்படும் ஏற்பாடுகளின் மீது பல கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவதனால் தொடர்புடைய நிலைபேறான நோக்கங்களை அடைந்து கொள்ளவதை இனங்காண்பது கடினமாகவுள்ளது. | மாவட்டத்திற்குரிய நிலைபேறான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை பிரதேச செயலக மட்டத்தில் இனங்காண வேண்டும். |

## 5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாவட்ட செயலகத்தின் ஆளணி 1566 பேர்களானதுடன், சம்பளம் மற்றும் படிகளிற்கான கொடுப்பனவுகள் ரூபா 696 மில்லியனாது. அறநாயக உதவி பிரதேச செயலாளர் பதவியும், மூன்றாம் நிலை 10 பதவிகளும் வெற்றிடமாக காணப்பட்டன. இரண்டாம் நிலை 06 பதவிகளில் 98 வெற்றிடங்கள் காணப்பட்டுதுடன் அவற்றில் 79 கிராம உத்தியோகத்தர் பதவிகளானது. ஆரம்ப நிலை 04 பதவிகளிற்குரியதாக 17 வெற்றிடங்களானது. மூன்றாம் நிலையின் கீழ் 109 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும், உள்ளவாறான அளவு 525 ஆனதில் 416 உத்தியோகத்தர்கள் மிகையொன்றாக காணப்பட்டனர். | வெற்றிடங்கள் தொடர்பாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவூட்டப்பட்டுள்ளது . | வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |